# விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

## சுற்றாடல் மற்றும் வன சீவராசி வளங்கள் அமைச்சு

## சுற்றாடல் முறைமை பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவ செயற்றிட்டம் (ESCAMP)

## 30 கிராம வேலிகளுக்கான வேலி உபகரணங்களின் பெறுகை – (படிநிலை 01 – 20 எண்ணிக்கை)

**(ஒப்பந்த இல. LK-ESCAMP-PMU-170665-GO-RFB)**

பத்தரமுல்ல, ரஜமல்வத்த, 82 ஆம் இலக்கத்திலுள்ள சுற்றாடல் மற்றும் வனசீவராசி வளங்கள் அமைச்சின் ESCAMP, செயற்றிட்ட முகாமைத்துவ பணிமனை, செயற்றிட்ட பெறுகை குழுத் தலைவர் போட்டி ரீதியிலான விலைமனுக் கோரல் நடைமுறையின் கீழ் 20 கிராம வேலிகளுக்கான மின்சார வேலி உபகரணங்களை வழங்குவதற்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை கோருகின்றார்.

| பெறுகை இலக்கம் | லொட் இல. | மீளளிக்கப்படாத கட்டணம் (ரூபா) | விலைமனுப் பிணை முறியின் பெறுமதி (ரூபா) |
|---|---|---|---|
| LK-ESCAMP-PMU-170665-GO-RFB | லொட் இல. I | 12,500.00 | 330,000.00 |
| | லொட் இல. II | | 120,000.00 |
| | லொட் இல. III | | 230,000.00 |

01. விலைமனுதாரர்கள் மொத்த எண்ணிக்கையான தேவைப்பாடுகளுக்கு விலைமனுக்களை சமர்ப்பிக்குமாறு வேண்டப்படுகின்றனர். (ஒரு லொட், இரண்டு லொட்கள் அல்லது சகல மூன்று லொட்களுக்கும்) பகுதியான விலைமனுக்கள் பதிலளிக்கப்படாத விலைமனுக்களாகக் கருதப்படும் என்பதுடன் அவை நிராகரிக்கப்படும்.

02. விலைமனுக் கோரலானது இலங்கை அரசாங்கத்தின் வழிகாட்டிகளினால் நிர்வகிக்கப்படுவதுடன் தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக் கோரல் (NCB) நடைமுறையின் கீழ் நடைமுறைப்படுத்தப்படுவதுடன் விலைமனுக்கோரல் ஆவணங்களில் திட்டவட்டமாக குறிப்பிட்டுள்ள தகுதித்தன்மை மற்றும் தகைமை தேவைப்பாட்டை பூர்த்தி செய்யும் அனைத்து தகுதியுள்ள விலைமனுதாரர்களும் இதில் பங்குபற்றலாம்.

03. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை பத்தரமுல்ல, ரஜமல்வத்த வீதி, 82ஆம் இலக்கத்திலுள்ள ''சம்பத்பாய'', சூழல்தொகுதி பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவ செயற்றிட்டம் பெறுகைப் **(ESCAMP)** பிரிவிலிருந்து மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான வேலை நேரங்களில் 2020 ஆகஸ்ட் 03ஆம் திகதி வரையும் பெற்றுக் கொள்ளலாம். சாதாரண வேலை நேரங்களில் மேலேயுள்ள முகவரியில் விலைமனுக்கோரல் ஆவணங்களை இலவசமாகப் பரீசித்துப் பார்க்கலாம். மேலும், விலைமனுக்கோரல் ஆவணத்தின் மாதிரியொன்று **www.escamp.lk** எனும் இணைதளத்தில் பார்வையிடுவதற்கு மாத்திரம் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. (தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி இலக்கங்கள் 011-2888426/ 011 2888427.)

04. 2020 ஜுலை 15ஆம் திகதியிலிருந்து 2020 ஆகஸ்ட் 03ஆம் திகதி வரையும் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையும் மீளளிக்கப்படாத கட்டணமாக 12,500.00 ரூபாவைச் செலுத்திய பின்னர், பத்தரமுல்ல, ரஜமல்வத்த வீதி, 82ஆம் இலக்கத்திலுள்ள ''சம்பத்பாய'', சூழல்தொகுதி பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவ செயற்றிட்ட **(ESCAMP)** செயற்றிட்ட பணிப்பாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றை ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் கொள்வனவு செய்யலாம். பணக்கொடுப்பனவு முறைமையானது சூழல்தொகுதி பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவ செயற்றிட்ட **(ESCAMP)**, செயற்றிட்ட கணக்காளரிடம் ரொக்கப் பணத்தில் செலுத்தப்படல் வேண்டும்.

05. பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்களை இரு பிரதிகளாக தனித்தனியான தபாலுறைகளில் இட்டு ''மூலப்பிரதி'' மற்றும் ''நகல்பிரதி'' என அடையாளமிடப்பட்டு, முத்திரையிடப்பட்டு ஒரு தனியான தபாலுறையில் உள்ளிட்டு தபாலுறையின் மேற்பகுதியில் ஒப்பந்த இலக்கம் மற்றும் நிர்மாணத் தலைப்பு ஆகியன குறிப்பிடப்பட்டு பின்வரும் முகவரிக்கு 2020 ஆகஸ்ட் 04ஆம் திகதியன்று மு.ப. 10.00 மணி அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும். விலைமனுக்கள் பத்தரமுல்ல, ரஜமல்வத்த வீதி, 82 ஆம் இலக்க, ''சம்பத்பாய'', சூழல்தொகுதி பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவ செயற்றிட்ட, செயற்றிட்ட முகாமைத்துவ மாநாட்டு அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியிலும் உள்ளிடலாம். தாமதமான விலைமனுக்கள் மற்றும் இலத்திரனியல் மூலம் அனுப்பப்படும் விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. ஐஒ பிரிவில் உள்ளவாறு மாதிரி விபரக்குறிப்புகளை விலைமனுக்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும். விலைமனுக்கள் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரரின் பிரதிநிதிகளின் முன்னிலையில் அவைகளை முடிய பின்னர் விரைவாகவே திறக்கப்படும்.

06. அனைத்து விலைமனுக்களுடனும் மத்திய வங்கியினால் உரிமம் வழங்கப்பட்டுள்ள இலங்கையில் செயற்படும் வர்த்தக வங்கியொன்றிலிருந்து பெறப்பட்ட ''விலைமனுப் பிணையொன்று'' இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். விலைமனுப் பிணையின் தொகை மேற்படி அட்டவணையில் தரப்பட்டுள்ளது. விலைமனுப்பிணையானது 2020 டிசம்பர் 14ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும். செல்லுபடியாகும் தன்மையிலுள்ள விலைமனுப் பிணையொன்றுடன் இணைக்கப்படாத மற்றும் விலைமனுக்கோரல் ஆவணத்துடன் இணைக்கப்பட்ட மாதிரிக்கமைவாக இல்லாத எந்தவொரு விலைமனுவும் நிராகரிக்கப்படும்.

07. விலைமனுதாரர் அவர்களின் விலைமனுக்களுடன் PCA 3 படிவத்தை (1987 ஆம் ஆண்டின் பொது ஒப்பந்தச் சட்டம்) இணைத்தல் வேண்டும். (http://www.drc.gov.lk/)

08. விலைமனுக்கள் 2020 நவம்பர் 04ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.

09. விலைமனுக்களைத் தயாரித்தல் அல்லது ஒப்படைத்தல் ஆகியன தொடர்பாக விலைமனுதாரர்களுக்கு ஏற்படும் எந்தவொரு ஆகுசெலவுகள் அல்லது செலவினங்களுக்கு கொள்வனவாளர் / தொழில் வழங்குநர் பொறுப்பேற்க மாட்டார்.

10. பெற்றுக் கொள்ளப்பட்ட எந்தவொரு விலைமனுவையும் ஏற்றுக் கொள்வதற்கும் நிராகரிப்பதற்குமான முழுமையான உரிமையை செயற்றிட்ட பெறுகைக் குழுவானது கொண்டுள்ளதுடன் இது தொடர்பில் செயற்றிட்ட பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதியானதாகும்.

**தலைவர்,**
**செயற்றிட்ட பெறுகைக் குழு,**
**செயற்றிட்ட முகாமைத்துவ பணிமனை,**
**சூழல்தொகுதி பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவ செயற்றிட்டம்,**
**''சம்பத்பாய'', இல.: 82,**
**ரஜமல்வத்த வீதி, பத்தரமுல்ல.**

**தொலைபேசி இல.: 0112888426/0112888427**
**www.escamp.lk**
**2020 ஜுலை 15**